இலங்கை கப்பல் இடித்ததில் பலியான

# மீனவரின் உடலை தோண்டி எடுத்து மறுபிரேத பரிசோதனை

## சுடப்பட்டு இறந்தாரா? அறிக்கையளிக்க உத்தரவு

**மதுரை, நவ. 17:** இலங்கை கடற்படை ரோந்து கப்பல் இடித்ததில் படகு மூழ்கி பலியான மீனவர் உடலை மீண்டும் தோண்டி எடுத்து மறுபிரேத பரிசோதனை செய்யவும், இறப்பு எப்படி ஏற்பட்டது என்பதை தெளிவுபடுத்தி அறிக்கையளிக்க வேண்டுமெனவும் ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த பிருந்தா, ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு:

என் கணவர் ராஜ்கிரண், மற்றும் சுகந்தன், சேவியர் ஆகியோர் புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் விசைப்படகு மீன்பிடி இறங்கு தளத்தில் இருந்து கடந்த அக்.18ம் தேதி மீன் பிடிக்கச் சென்றனர். அக்.19ல் நடுக்கடலில் மீன் பிடித்தபோது, இலங்கை கடற்படையினர் ரோந்துக் கப்பலால் படகை இடித்து தள்ளியுள்ளனர்.

இதில், இந்திய மீனவர்களின் படகு பழுதாகி நடுக்கடலில் மூழ்கியது. படகில் இருந்த மீனவர்கள் சுகந்தன் மற்றும் சேவியரை இலங்கை கடற்படையினர் மீட்டனர். 2 நாட்களுக்கு பிறகு, எனது கணவர் ராஜ்கிரண் சடலமாக மீட்கப்பட்டார். என் கணவரின் உடலை யாரிடமும் காட்டாமல் அடக்கம் செய்தனர். இலங்கை கடற்படையால் அவர், சுட்டு கொல்லப்பட்டிருக்கலாம். போட்டோவில் அவர் முகம் மற்றும் உடலில் காயங்கள் இருந்தன.

இந்த சம்பவம் குறித்து தமிழக போலீசார் வழக்குப்பதிவு செய்யவும், ராஜ்கிரண் உடலை தடயவியல் நிபுணர்களைக் கொண்டு மறு பிரேத பரிசோதனை செய்யவும், அவர் எப்படி இறந்தார் என்பதை கண்டறியும் உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனுவை நேற்று மீண்டும் விசாரித்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், அடக்கம் செய்யப்பட்ட ராஜ்கிரணின் உடலை நாளை (நவ.18) தாசில்தார் முன்னிலையில் மீண்டும் தோண்டி எடுத்து அரசு மருத்துவர்கள் மறுபிரேத பரிசோதனை செய்ய வேண்டும். மனுதாரர் தரப்பில் ஓய்வு பெற்ற தடயவியல் அதிகாரி சேவியர் செல்வ சுரேஷ் உடன் இருக்கலாம். சுடப்பட்டு இறந்தாரா அல்லது கடலில் மூழ்கி இறந்தாரா என்பதை தெளிவுபடுத்தும் வகையில் மறு பிரேத பரிசோதனை அறிக்கை இருக்க வேண்டும் எனக் கூறி, விசாரணையை நவ.24க்கு தள்ளி வைத்தார்.